DINAMANI

20 SEP 2022


PAGE 2

# புதுச்சேரி பல்கலை. ஆங்கிலத் துறையின் சமூக வலைதளப் பக்கங்கள் தொடக்கம்

புதுச்சேரி, செப் 19: புதுச்சேரி மத்திய பல்கலைக்கழக ஆங்கிலத் துறை சமூக வலைதளப் பக்கங்களை நிறுவி, கற்பித்தலில் நவீன தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்தியுள்ளது.

இதன்மூலம் யூ டியூப், முக நூல், இன்ஸ்டாகிராம் பக்கங்களை நிறுவி தனது இணையவழி இருப்பை பல்கலைக்கழக ஆங்கிலத் துறை உறுதி செய்தது.

இதுகுறித்து பல்கலைக்கழகத்தின் ஆங்கிலத் துறையில் அண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பல்கலைக்கழக இயக்குநர் க.தரணிக்கரசு ஆங்கிலத் துறையின் 'பார்வைகள்' என்னும் வாழ்வறை நூலையும், 'குரல்' என்னும் செய்தி மடலையும் வெளியிட்டார். பல்கலை. மனிதவியல் புலத்தின் முதன்மையர் பேராசிரியர் கிளமன்ட் லூர்து அதைப் பெற்றுக் கொண்டார்.




புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 'பார்வைகள்' என்னும் வாழ்வறை நூலையும், 'குரல்' என்ற செய்தி மடலையும் வெளியிட்ட ஆங்கிலத் துறைப் பேராசிரியர் க.தரணிக்கரசு. உடன் பேராசிரியர் கிளமன்ட் லூர்து, எழுத்தாளர் இளவேனில் உள்ளிட்டோர்.

எழுத்தாளர் புதுவை இளவேனில் ஆங்கிலத் துறையின் சமூக ஊடகப் பக்கங்களைத் தொடக்கிவைத்தார். நிகழ்ச்சியில் பேராசிரியர்கள் பினு சக்கரியா, ரேஷ்மி, விசாகாதேவி மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். ஆங்கிலத் துறைத் தலைவர் பேராசிரியர் த.மார்க்ஸ் நன்றி கூறினார்.